[1978 செப்டம்பர் 7

(முற்பகல் 9-30)

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து; தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்களுடைய சொற்பொழிவிலே குறிப்பிட்டதைப் போல ஆக்கப்பூர்வமான கருத்துக்கள் அதிலே இருக்குமானால் அதை எடுத்துக் கொண்டு செயல்படுத்துவதிலே அரசுக்கு எந்த விதமான ஆட்சேபணையும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு: தலைவர் அவர்களே ஆலோசனைக் குழுக்களில் எல்லா அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்களுக்கும் பிரதிநிதித்துவம் அளிக்கப்படவேண்டும் என்ற அடிப்படையிலே மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை விஷயத்தில் சில கட்சிகளுக்குப் பிரதிநிதித்துவம் அளிக்கப்படவில்லை. ஒவ்வொரு கட்சியினரும் யார் யாரைப் போடவேண்டும் என்ற விவரங்களைச் சுட்டிக்காட்டியும், எழுத்துப்பூர்வமாக விவரங்களை அளித்து இருந்தும்கூட மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள் குறிப்பாக என்னுடைய தொகுதியிலே போடப்படவில்லை, இதைப்பற்றி.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவு செய்து உட்காருங்கள்.

திரு. ரா. உமாநாத்; அதற்கு அமைச்சர் பதில் சொல்லட்டுமே.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தாங்கள் கேட்டதைத் தான் உறுப்பினர் அவர்களும் கேட்கிறார்கள்.

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு: திரு. உமாநாத் அவர்கள் கேட்டது கட்சி அடிப்படையிலே நான் என்னுடைய தொகுதியிலே உள்ள நிலைமையைக் கேட்கிறேன்......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. உமநாத் அவர்கள் கேட்ட கேள்வியையே தான் தாங்களும் கேட்கிறீர்கள், தயவு செய்து உட்காருங்கள். அதையே திருப்பிக் கேட்டு நேரத்தை வீணாக்க வேண்டாம்.

ஆயக்குடி பேரூராட்சி.

* வினா 71—திரு. நா. பழனிவேல்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பழனி வட்டம் ஆயக்குடி பேரூராட்சியை இரண்டாக பிரிக்கும்படி அப்பேரூராட்சியிலிருந்து கோரிக்கை ஏதேனும் வந்ததா?

(ஆ) ஆம் எனில் அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.